بسم الله الرحمن الرحيم

# கேள்வி : 59

# கற்பமுற்றிருக்கும் பெண்ணும், பாலூட்டும் பெண்ணும் ரமலானில் நோன்பு நோற்க முடியாவிட்டால் அவர்கள் என்ன செய்யவேண்டும்? விளக்கவும்.

## பதில்:

கற்பமுற்றிருக்கும் பெண் அவருடைய கர்ப்பகாலம், மற்றும் பாலூட்டும் காலம் சேர்ந்து முப்பது மாதங்கள் சுமார் இரண்டரை வருடங்கள் ஆகிவிடும். அவ்வாறிருக்கும் போது, அக்காலகட்டத்தில் அவர்களால் நோன்பு நோற்கமுடியாவிட்டால் என்ன செய்யவேண்டும்? என்பது சம்பந்தமாக அறிஞர்களுக்கு மத்தியில் பலவகையான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

முதலாவது கருத்து : அவரின்மீது நோன்பை களாச் செய்தால் போதும் என்று ஸஹாபாக்களின் அலி(ரலி)அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.இதே கருத்தை இமாம் அபூஹனீபா(ரஹ்)அவர்களும் குறிப்பிடுகின்றார்கள்.

இரண்டாவது கருத்து : இந்த இருவரும் நோன்பு வைப்பதின் மூலம் தனக்கு ஏதும் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்தால், அவர்கள் களா செய்தால் போதும். நோன்பு வைப்பதின் மூலம் குழந்தைக்கு ஏதும் ஏற்பட்டுவிடும் என்று குழந்தையைப் பயந்தால், அவர்கள் களாச் செய்வதுடன், ஒவ்வொரு நாளைக்கும் பகரமாக ஒரு ஏழைக்கு உணவும் அளிக்கவேண்டும் என்று இப்னு உமர்(ரலி)அவர்கள் கூறியதாக, இமாம் அல்ஜஸ்ஸாஸ்(ரஹ்)அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதே கருத்தில் இமாம் ஷாபிஈ(ரஹ்)அவர்களும், இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல்(ரஹ்)அவர்களும் இருக்கின்றனர்.

மூன்றாவது கருத்து : அவர்கள் இருவரும் ஏழைகளுக்கு உணவளிப்பது போதுமாகும், களாச் செய்ய தேவையில்லை என்று இப்னு அப்பாஸ்(ரலி)அவர்கள் கூறுகின்றார்கள். (நூல்: அல்முகன்னி லி இப்னு குதாமா)

عَنْ ابْنِ عَبَّاسٍ وَعَلَى الَّذِينَ يُطِيقُونَهُ فِدْيَةٌ طَعَامُ مِسْكِينٍ قَالَ كَانَتْ رُخْصَةً لِلشَّيْخِ الْكَبِيرِ وَالْمَرْأَةِ الْكَبِيرَةِ وَهُمَا يُطِيقَانِ الصِّيَامَ أَنْ يُفْطِرَا وَيُطْعِمَا مَكَانَ كُلِّ يَوْمٍ مِسْكِينًا وَالْحُبْلَى وَالْمُرْضِعُ إِذَا

خَافَتا قَالَ أَبُو دَاوُد يَعْنِي عَلَى أَوْلادِهِمَا أَفْطَرَتَا وَأَطْعَمَتَا. روى أبو داود قال النووي : إسناده حسن.

"எவருக்கு சக்தியிருக்கின்றதோ அவர் (நோன்பிற்கு பகரமாக) ஏழைக்கு உணவளிக்கட்டும்" என்ற வசனத்திற்கு இப்னு அப்பாஸ்(ரலி)அவர்கள் விளக்கமளிக்கின்றபோது. வயது முதிர்ந்த வயோதிக ஆணும் பெண்ணும் நோன்புவைக்க சக்தியிருந்தும், அவர்கள் நோன்பை விட்டுவிட்டு ஒவ்வொரு நாளுக்கும் பகரமாக ஒரு ஏழைக்கு உணவளித்தால் போதுமாகும் என்று அனுமதி இருக்கிறது.இதைப் போன்றுதான் கற்பமுற்றிருக்கும் பெண் மற்றும் பாலூட்டும் பெண்ணும் தங்களின் மீதோ குழந்தையின் மீதோ பயந்தால் நோன்பை விட்டுவிட்டு ஒவ்வொரு நாளுக்கும் பகரமாக ஒரு ஏழைக்கு உணவளித்தால் போதுமாகும் என்று விளக்கியுள்ளார்கள். (நூல்: அபூதாவூத், இதனுடைய அறிவிப்புத் தொடர் ஹஸன் என்ற தரத்திலுள்ளது என்பதாக இமாம் நவவி(ரஹ்)அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்).

اخْتَلَفَ السَّلَفُ فِي ذَلِك عَلَى ثَلَاثَةِ أَوْجُهٍ ; فَقَالَ عَلِيٌّ : : عَلَيْهِمَا الْقَضَاءُ إذَا أَفْطَرَتَا وَلا فِدْيَةَ عَلَيْهِمَا . وَقَالَ ابْنُ عَبَّاسٍ : عَلَيْهِمَا الْفِدْيَةُ بِلا قَضَاءٍ . وَقَالَ ابْنُ عُمَرُ: عَلَيْهِمَا الْفِدْيَةُ وَالْقَضَاءُ " اهـ.

இது சம்பந்தமாக ஸஹாபாக்களிடையே மூன்று வகையான கருத்துக்கள் இருக்கின்றன. அவர்கள் இருவரும் நோன்பை விட்டுவிட்டால் அவர்களின் மீது களா இருக்கிறது, அவர்கள் உணவளிக்கத் தேவையில்லை என்று அலி(ரலி)அவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் இருவர்மீதும் உணவளித்தல் இருக்கிறது களாச் செய்யத் தேவையில்லை என்பதாக இப்னு அப்பாஸ்(ரலி)அவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் இருவரின் மீதும் களாவும் இருக்கிறது, உணவளிக்கவும் வேண்டும் என்பதாக இப்னு உமர்(ரலி)அவர்கள் கூறுகின்றார்கள். (நூல்: அஹ்காமுல் குர்ஆன்)

واستدل من قالوا بأن عليهما القضاء فقط بعدة أدلة:

1- ما رواه النسائي عَنْ أَنَسٍ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : ( إِنَّ اللَّهَ وَضَعَ عَنْ الْمُسَافِرِ نِصْفَ الصَّلاةِ ، وَالصَّوْمَ ، وَعَنْ الْحُبْلَى وَالْمُرْضِعِ ) . صححه الألباني في صحيح النسائي. فجعل النبي صلى الله عليه وسلم حكم الحامل والمرضع كالمسافر والمسافر يفطر ويقضي فكذلك الحامل والمرضع

2- القياس على المريض ، فكما أن المريض يفطر ويقضي فكذلك الحامل والمرضع. انظر : "أحكام القرآن" للجصاص

எவர்கள் அவர்கள் இருவரின் மீதும் களா மட்டும் இருக்கிறது என்று கூறுகின்றார்களோ, அவர்கள் பல ஆதாரங்களை முன்வைக்கின்றனர்.

1. நிச்சயமாக அல்லாஹ் பிரயாணியின் மீது தொழுகையை பாதியாக்கிவிட்டான், இன்னும் நோன்பையும் இல்லாமல் ஆகிவிட்டான். இன்னும் கற்பமுற்றிருக்கும் பெண் மற்றும் பாலூட்டும் பெண்ணின் மீதும் நோன்பில்லாமல் ஆக்கிவிட்டான் என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அனஸ்(ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்: நஸாயீ, இந்த ஹதீஸை அஷ்ஷைக் அல்பானி(ரஹ்)அவர்கள் சரிகாண்டிருக்கின்றார்கள்). இந்த ஹதீஸில் நபி(ஸல்)அவர்கள் கற்பமுற்றிருக்கும் பெண் , இன்னும் பாலூட்டும் பெண்ணையும் முஸாபிர் பிரயாணிக்கு ஒப்பாக ஆக்கியிருக்கின்றார்கள். ஒரு பிரயாணி தனது பிரயாணத்தில் நோன்பு நோற்கமாட்டார், ஆனால் அதை பின்னால் களாச் செய்வார். அதைப் போன்றுதான் கற்பமுற்றிருக்கும் பெண் , இன்னும் பாலூட்டும் பெண்ணும் நோன்பை விட்டுவிடுவார்கள், அதை பின்னால் களாச் செய்வார்கள்.

2. நோயாளின் (சட்டத்தின்) மீது கியாஸ் எடுப்பதாகும். ஒரு நோயாளி நோன்பு காலத்தில் நோன்பை (நோயின் காரணமாக) விட்டுவிடுவார், பின் அவர் நிவாரணம் பெற்றபின் விடுபட்ட நோன்புகளை வைப்பார். அதைப்போன்றுதான் கர்பிணிப்பெண்ணும், பாலூட்டும் பெண்ணும். (நூல் ; அஹ்காமுல் குர்ஆன்)

இது சம்பந்தமாக அஷ்ஷைக் இப்னு பாஸ்(ரஹ்)அவர்களிடம் கேட்கப்பட்டபோது கீழ்க்காணுமாறு பதிலளித்துள்ளார்கள்.

"الحامل والمرضع حكمهما حكم المريض ، إذا شق عليهما الصوم شرع لهما الفطر ، وعليهما القضاء عند القدرة على ذلك ، كالمريض ، وذهب بعض أهل العلم إلى أنه يكفيهما الإطعام عن كل يوم : إطعام مسكين ، وهو قول ضعيف مرجوح ، والصواب أن عليهما القضاء كالمسافر والمريض ؛ لقول الله عز وجل : ( فَمَنْ كَانَ مِنْكُمْ مَرِيضاً أَوْ عَلَى سَفَرٍ فَعِدَّةٌ مِنْ أَيَّامٍ أُخَرَ ) البقرة/184" اهـ. مجموع الفتاوى

கர்ப்பிணி இன்னும் பாலூட்டும் பெண்களின் சட்டம் நோயாளியின் சட்டத்தைப் போன்றாகும். இவர்கள் இருவருக்கு நோன்பு வைப்பது சிரமமாக இருந்தால், அவர்கள் நோன்பை விட்டுவிட அனுமதியிருக்கின்றது. பின் எப்போது அவர்கள் சக்தி பெறுகின்றார்களோ அப்போது அதை அவர்கள் களாச் செய்துகொள்ளலாம், நோயாளியைப் போன்று. ஒருசில அறிஞர்கள் நோன்பிற்கு பகரமாக ஒவ்வொரு நாளும் ஒரு ஏழைக்கு உணவளிப்பது அவர்கள் இருவருக்கும் போதுமாகும் என்று கூறுகின்றனர். இது பலவீனமான சொல்லாகும், இன்னும் இது அனுமானத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டதாகும். சரியானது எதுவென்றால், அவர்கள் இருவரின் மீது, நோயாளி மற்றும் பிரயாணியைப் போன்று களாச் செய்வதுதான். "உங்களில் எவர் நோயாளியாகவோ, அல்லது பிரயாணியாகவோ இருந்தால், அவர்

வேறொரு நாட்களில் நோன்பு வைத்துக்கொள்ளட்டும்(அல் பகரா : 184 ) என்று அல்லாஹ் கூறுகின்றான் என்று பதிலளித்துள்ளார்கள். (நூல்: மஜ்மூவுல் பதாவா இப்னு பாஸ் : 15 /227 )

பதாவா லஜ்னதுத்தாயிமா - மூலம் வெளியிடப்பட்டுள்ள பதாவா எண்கள் 10 / 220 & 226 ஆகிய பதாவாக்களிலும் ஷைக் இப்னு பாஸ்(ரஹ்)அவர்களின் பதாவாவைப்போன்றே கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் இருவரும் நோயாளியைப் போன்றுதான் என்று பத்வா வழங்கப்பட்டுள்ளது.

அஷ்ஷைக் ஸாலிஹ் அல்முநஜ்ஜித் அவர்களின் பத்வா எண்: 49794 இதிலும் மேற்கண்ட கருத்தே பத்வாவாக சொல்லப்பட்டிருக்கின்றது.

எனவே, கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு நோன்பு நோற்பதில் சிரமத்தை அவர்கள் உணர்ந்தால், நோன்பை விட்டுவிடலாம். பின்பு அவர்களுக்கு எப்போது நோன்பு வைக்க முடியும் என்பதை உணர்கிறார்களோ அப்போது நோன்பு வைத்துக் கொள்ளலாம். அது காலம் நீண்டாலும் பரவாயில்லை. இவர்கள் நோயுற்ற நோயாளியைப் போன்று எப்போது அவர் சுகம் பெறுகிறாரோ, எப்போது அவர் சக்தி பெறுகிறாரோ அப்போது நோன்பு நோற்றுக் கொள்ளலாம்.அதேபோன்றுதான் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்ணும் என்பதுதான் அதிகமான அறிஞர்களின் கருத்தாகும்.

**அல்லாஹ்வே மிக அறிந்தவன்!.**

**இப்படிக்கு,**
**தொகுப்பு மற்றும் மொழியாக்கம்**
**K .K . பிஸ்மில்லாஹ் கான் பைஜி**